திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பொதுவாகவே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 18 சதவீத இடங்களும் பூர்த்தி ஆகாத நிலையில்தான் இருக்கிறது. இந்த உத்தரவு முறையாக அமுல்படுத்தப் படுவதற்காக அரசு சுற்றறிக்கை ஏதாவது அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிக் குறைவான அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. இது சரியாக அமுல்படுத்தப் படுவதற்கு அரசு ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இன்னும் குறைபாடுகள் இருக்குமானால் கவனிக்கப்படும்.

காவல் துறை அலுவலர்கள் மாநாடு

*** 395 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 13-9-1971 அன்று தமிழ்நாடு மாவட்ட போலிஸ் அதிகாரிகள் மாநாடு சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு அவை ஆய்விலிருந்து வருகின்றன :—

1. மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்து ஆப்காரி சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது தொடர்பாக காவலர்களுக்குள்ள சிக்கல்கள்.

2. நாட்டு வெடி மருந்து வைத்துப் பாறைகளை உடைப்பதைத் தடை செய்வது.

3. மருத்துவ மனைகளில் குற்றவாளி சிகிச்சைப் பிரிவுகள் கட்டுவது.

4. நகரங்களிலும், பட்டணங்களிலும் சாலைகள். தெருக்கள் இவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகள்.

5. மாநில எல்லைச் சோதனை நிலையங்கள் வெவ்வேறு துறைகள் வெவ்வேறு சோதனை நிலையங்களை வைத்து வருவது-பொதுச் சோதனை நிலையம் ஏற்படுத்துவது.

6. காவலர் செய்தித் தொடர்புகளையும் போக்குவரத்து வசதிகளையும் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.

7. துப்பறியும் முறைகளை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.

8. காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவிதத்தின ருக்குக் குடியிருப்பு வசதியளிப்பது என்னும் குறிக்கோள் அளவை எய்துவதற்காகக் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை விரிவு படுத்துதலும், இத் திட்டத்தை அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உட்கோட்ட அதிகாரிகளுக்கு நீட்டித்தலும்.

TRUTH ALONE TRIUMPHS

1971 டிசம்பர் 15]

9. சென்னை மாநகர் காவலர் சட்டம் ஊர்வலம் நடத்த விரும்புவோர் அந்த இடத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டருக்குக் குறைந்தது 24 மணி நேர முன்பு அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்னும் வகையில் போதிய விதித்துறை செய்தல்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த முடிவுகள் மிகவும் சிறப்பான அம்சங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. எனினும், கைதிகளுக்கு வேண்டிய விடுதிகளில் தனி வார்டுகள் கட்டுவது சம்பந்தமாக ஆலோசிக்கப்படுவதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட வார்டுகள் சில நேரங்களில் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே, இதற்கு உடனடியாக முயற்சி செய்து வார்டுகள் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவ்வாறு தனி இடங்கள் கட்டும் பணியைப் பல நிலைகளில் மேற்கொள்ளலாம் என்றும், முதலில் வேலூரிலும், பிறகு முறையே மதுரை, கோவை, தஞ்சை கடலூர் ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் மனத்தில் வைத்து இருக்கும் நிதி நிலைகளுக்கு ஏற்றவாறு இந்தக் காரியம் செயல்படுத்தப்படும்.

திரு. என். கிட்டப்பா: போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கெனத் தனியே சங்கம் வைத்துக்கொள்ள அனுமதி கோரி அரசாங்கத்தினிடம் விண்ணப்பம் செய்துள்ளாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஏதும் தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : போலீஸ் அதிகாரிகளுடைய மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எடுக்கப்பட்ட முடிவுகளா? அல்லது அகில இந்திய அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளா? மற்ற மாநிலங்களிலும் இதுபோன்ற மாநாடுகளைக் கூட்டி இத்தகைய கோரிக்கைகளை எழுப்பி, முடிவுகளை அந்தந்த மாநில அரசுக்கு அனுப்பியுள்ளனரா? அகில இந்திய அடிப்படையில் முடிவுகளெல்லாம் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கு 13-9-1971இல் நடைபெற்ற போலிஸ் அதிகாரிகள் மாநாடு தமிழ்நாடு மாவட்டப் போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடாகும்; அகில இந்திய ரீதியில் நடைபெற்ற மாநாடு அல்ல.

திரு. எம். தேவராசன் : நாட்டிலே நாச வேலைகளில் ஈடுபடுகின்ற நச்சல்பாரிகளை ஒடுக்க ஏதாவது முடிவு எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளுக்கும் ஏற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபற்றியும் விவாதிக்கப்பட்டது.

மாநில திட்டக் குழு

* 396 **வின—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் எப்போது செயல்படத் துவங்கும்?

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் எப்போது தீட்டப் படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் 17-6-1971-ம் தேதி முதல் தனது பணியைத் துவக்கியது.

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் ஏற்கனவே மாநில நிதித் துறையால் தீட்டப்பட்டு, மன்றத்தில் 1971-72-ம் ஆண்டுக் கான திருத்திய வரவு செலவு பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திட்டக் கமிஷன் தனது திட்ட அறிக்கை எதுவும் இதுவரை தரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கிட்டத்தட்ட 6 மாத காலம் ஆகிவிட்டது. திட்டக் கமிஷன் தனது பணியைத் துவங்கி. 1971-72-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைக் குறித்துக் கருத்துக்கள் ஏதாவது சொல்லக்கூடிய முறையிலோ அல்லது வருஷா வருஷம் எம்மாதிரித் திட்டம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ ஒரு இடைக்கால அறிக்கையினைத் திட்டக் கமிஷன் சமர்ப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அதிலே 'டாஸ்க் ஃபோர்ஸ்' என்று 15 பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் இன்றைக்கு ஆய்ந்து வருகி றார்கள். நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல் வருகின்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின் போது ஒரு முன்வரைவு ஒன்றை வைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். எனவே. வரவு-செலவுத் திட்டம் விவாதிப் பதற்குள்ளாக அதைத் தருவார்கள் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the State Planning Commission is working in conjunction with the Central Planning Commission and whether there is any co-ordination between the State Planning Commission and the Central Planning Commission? Also, whether the State Planning Commission has discovered certain new ideas or plans which have escaped the attention of the Central Planning Commission and if so, whether any particular headway or special contribution has been made by State Planning Commission?